கல்முனை மாநகர சபை
அம்பாரை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 ஆந் திகதி மாநகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கல்முனை மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேட்டின்படி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணக் கணக்கு ரூபா 40,259,540 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றில் இம்மீதி ரூபா 1,326,606 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) பெற்றுக்ககொள்ளப்பட்ட மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் காரைதீவு பிரதேச சபைக்கு மாநகர சபையினால் செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா 2,854,802 ஆக இருந்த போதிலும் அத்தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) நன்கொடையாகப் பெறப்பட்டு மாநகர சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்த 15 வாகனங்களும் “நனசல” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 04 கனணிகளும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 1987 முதல் நிலுவையாகக் காணப்பட்டு வரும் பொதுச்சந்தைக் குத்தகை ரூபா 12,314,393, இறைச்சிக் கடை குத்தகை ரூபா 5,979,594, கடை வாடகை ரூபா 13,540,408 என்பவற்றை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு

நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 1996 முதல் இன்று வரை அறவிடப்படாதுள்ள துவிச்சக்கர வண்டி மற்றும் வாகன பாதுகாப்பு குத்தகை ரூபா 3,325,163 தொகையை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 119,239,060 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 4,751,565 | |
| பொறித்தொகுதியும் இயந்திரங்களும் | 5,086,250 | |
| வாகனங்களும் வண்டிகளும் | 11,130,013 | |
| பொதுச்சந்தைக் குத்தகை நிலுவை | 12,314,393 | குத்தகை நிலுவைப் பதிவேடு |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252 பிரிவு 218 | நிர்வாகம் தொடர்பாக ஆணையாளரினால் ஒவ்வொரு நிதி ஆண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய விபரமான அறிக்கை 2016 ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2014 திசெம்பர் 30 ஆம் திகதிய 03/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபை முதல்வரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக சர்வதேச தொலைபேசிப் பாவனை மற்றும் இணையத்தள சேவைகளுக்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 39,520 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள போதிலும், அத்தொகையை அவரிடமிருந்து 2017 செப்டெம்பர் 25 ஆந்திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் நகர அபிவிருத்தி எனும் பெயரில் வங்கி கணக்கொன்றை ஆரம்பித்து சேவைக்கட்டணங்களும் தண்டப்பணங்களும் அக்கணக்கில் வைப்பிலிடவேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தும் மாநகர சபையானது அவ்வாறான வங்கி கணக்கொன்றை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 21,251,122 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,716,308 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 10,534,814 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 ஆதன வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1) (ஆ) பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார எல்லைக்குள் குடியிருக்கும் 45,545 ஆதன உரிமையாளர்களிடமிருந்து 1988 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடவேண்டிய ரூபா 105,113,556 தொகையான ஆதன வரியில் 13 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 14,128,416 தொகை மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆதனவரியை அறவிடுவதற்காக நியமிக்கப்பட்ட 05 நிரந்தர ஊழியர்கள் மற்றும் 03 தாற்காலிக ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 2,425,540 தொகை சம்பளமாக வழங்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் அவர்களால் ரூபா 3,028,416 தொகையான நிலுவை வருமானத்தினை மாத்திரமே அறவிட முடிந்தது. எனினும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியால் இவ்விடயம் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 பொதுச்சந்தை கடை வாடகை அறவீடு

மாநகர சபைக்குச் சொந்தமான பொதுச்சந்தையில் 503 கடைகளில் 64 கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து நிலுவை வாடகை ரூபா 5,130,143 தொகை 6 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 07 வாகனங்கள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச்சென்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 339,973 கடன் மீதியை அறவிடுவதற்கு 2017 செப்டெம்பர் 25 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள 07 உழவு இயந்திரங்கள், 04 இழுவைப் பெட்டிகள், 01 தண்ணீர் பவுசர், 01 மோட்டார் கிரேடர், மற்றும் 01 எக்ஸ்கவேட்டர் இயந்திரம் என்பவற்றை திருத்தம் செய்து

பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றன.

(ஆ) இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் ''நனசல'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நற்பிட்டிமுனை நூலகத்திற்கு 2014 ஆம் ஆண்டு நன்கொடையாக வழங்கப்பட்ட 04 கனணிகள் 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

3.3.1 சிறுவர் கடற்கரைப் பூங்கா

நெல்சிப் (NELSIP) செயற்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2016 ஜனவரி 10 ஆந்திகதி சாய்ந்தமருது சிறுவர் கடற்கரைப் பூங்காவில் ரூபா 768,148 செலவில் அமைக்கப்பட்ட மலசலகூடத்திற்கு நீர் வசதிகள் வழங்கப்படாமையினால், அதனை 2017 செப்டெம்பர் 25 ஆந் திகதி வரை பாவனையற்று காணப்படுகின்றது.

3.3.2 மருதமுனை பொது நூலகத்தில் கேட்போர்கூடம் அமைத்தல்

மருதமுனை பொது நூலக கேட்போர்கூடத்திற்காக ஒப்பந்தக்காரரினால் 14 குளிரூட்டி இயந்திரங்கள் (Air Conditioner) ஒன்று ரூபா 204,600 விலையில் ரூபா 2,864,400 பெறுமதிக்கு 2016 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுக்கு எழுத்து மூலம் அளிக்கப்பட்ட கூற்றின்படி அதே வகையான அதே வியாபாரக் குறியுள்ள குளிரூட்டி இயந்திரத்தை ஒன்று ரூபா 114,900 விலையில் விநியோகித்து பொருத்துவதற்கு ஒரு தனியார் நிறுவனம் உடன்பட்டிருந்தது. இதன்படி, ஒப்பந்தக்காரரிற்கு ரூபா 1,255,800 தொகையானது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

3.3.3 கல்முனை சுற்றுலா தகவல் மையம் நிர்மாணித்தல்

மீளாய்வாண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் கல்முனை சுற்றுலா தகவல் மைய நிர்மாணவேலையானது 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி பூர்த்தியாக்கப்பட்டு தொழிநுட்ப உத்தியோகத்தரால் சிபார்சு செய்யப்பட்டு ரூபா 2,593,013 செலுத்தப்பட்ட போதிலும், ரூபா 333,000 பெறுமதியான 4 வேலைகள் செய்து முடிக்கப்படாமையினால் 2017 செப்டெம்பர் 25 ஆந் திகதி வரை மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பதிலளிக்கப்படாத ஐயவினாக்கள்

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு இறுதி வரை வழங்கப்பட்ட 28 கணக்காய்வு ஐயவினாக்களில் 19 ஐயவினாக்களுக்கு இன்றுவரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபைக்குச் சொந்தமான பொதுச்சந்தைக்கு அண்மையிலுள்ள தனியார் கடைகள் மாதாந்தம் ரூபா 10,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், இக்கடைகள் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 300 தொடக்கம் ரூபா 2500 வரையான வீச்சுடைய வாடகையில் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் சந்தை நிலைமையை அறிந்து அதற்கேற்ப வாடகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அண்ணளவாக ரூபா 60 மில்லியன் தொகையான வருமானத்தை சபை வருடாந்தம் இழந்து வருகின்றது.

(ஆ) இறைச்சிக் கடைகளுக்கான குத்தகைப் பிணைப்பணமாக ரூபா 544,154 பெறுமதியான 06 காசோலைகள் பெறப்பட்டு 2012 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வங்கியில் வைப்புச்செய்யப்பட்ட பின் வங்கியால் மறுக்கப்பட்ட போதிலும், இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(இ) அலுவலகத்தின் அமைவிடத்தைக் காட்டும் குறிகாட்டி பலகையை தயாரித்து பொருத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 123,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும். 2017 செப்டெம்பர் 25 ஆம் திகதி வரை குறித்த பலகைகள் தயாரித்து வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2009 ஆண்டு வழங்கப்பட்ட நிதிகளில் ரூபா 3 மில்லியன் தொகை நிலையான வைப்புக்கணக்கிலும் ரூபா 2,468,590 தொகை நடைமுறைக்கணக்கிலும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் குறித்த பணம் இன்றுவரை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மாநகர முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்ட 2014 திசெம்பர் தொடக்கம் 2015 பெப்ரவரி வரையான மூன்று மாதங்களுக்காக ரூபா 13,011 தொகையான கையடக்கத் தொலைபேசி கட்டண பட்டியல்கள் 2015 ஆம் ஆண்டில் இருதடவைகள் செலுத்தப்பட்டுள்ள போதிலும், இது தொடர்பாக இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாநகர சபை நிதியைப் பயன்படுத்தி ரூபா 124,969 தொகைக்கு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2015 யூன் 30 ஆந் திகதி கல்முனை அல் அமீன் பாடசாலைக்கு ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், அப்பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூலக் கூற்றின்படி அப்பொருட்கள் 2017 செப்டெம்பர் 25 ஆந் திகதி வரை அப்பாடசாலைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014 ஆம் ஆண்டில் கல்முனை இஸ்லாமபாத் சுனாமி வீடமைப்புத்திட்டதின் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்ட வேலைக்கான கணியப்பட்டியல்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 903,520 பெறுமதியான 9 வேலைகள் ஒப்பந்தக்காரரால் பூர்த்தி செய்யப்படாத போதிலும் அவ்வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதாக சான்றுப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டமை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | i. திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல்<br>ii. திண்மக் கழிவு சேவைக் கட்டண அறவீடு |
| (ஈ) ஆளணி முகாமைத்துவம் | வெற்றிடங்களுக்கான ஆளணிப் பகிர்வு |
| (உ) இருப்புக்கட்டுப்பாடு | முறையான இருப்புக் களஞ்சியம் |